Hale & Healthy HOSPITAL HHH
Multi Speciality Since 1987
A1, Srinivasapuram, 7th Main Road, Thiruvalluvar Nagar, Next to Thiruvanmiyur RTO, Thiruvanmiyur Chennai - 600 041.
Contact
044-43090397/ 9677194440

EXPRESS VELACHERY
Neighbourhood Newspaper - Weekly
Free Circulation

நாவில் நடனமாடும் சுவைக்கு
கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 4 ISSUE - 44 Editorial : 044-42077328 / 7305837388

## "GNC'S SKILL JOURNEY AN ORIENTATION PROGRAMME FOR FRESHERS 2023-24"

**Students to acquire skills for life and employability says Thiru. Md. Nasimuddin IAS, Additional Chief Secretary, Labour Welfare and Skill Development, Government of Tamil Nadu.**



The Guru Nanak Centre for Consultancy and Outreach Initiatives and Guru Nanak Centre for Skill Development jointly organised the "GNC's Skill Journey: An Orientation Programme for Freshers 2023-24" on 05th July 2023. **Thiru. Md. Nasimuddin IAS, Additional Chief Secretary, Labour Welfare and Skill Development, Government of Tamil Nadu**, the Chief Guest, in his address, said, "Nothing teaches more than experience and students should acquire life skills as well as skills for employability". He added that students need to understand that Youth is a crucial passing phase in one's life and one should focus on the long-term view of life".He also interacted with the students and shared his experiences of using Time efficiently to enjoy life and to empower themselves. He highlighted that the ITI courses introduced by the Government of Tamil Nadu are increasing in demand and concluded by saying that the freshers should make use of the opportunity and facilities provided by the college and become able citizens of the country. General Secretary and Correspondent Mr. Manjit Singh Nayar, Advisor Dr. Marlene Morais, Principal Dr. M.G.Ragunathan, Dr. Swati Paliwal, Head, Consultancy and Outreach Initiatives, Dr. R.Anand, Dean, Guru Nanak Centre for Skill Development and Vice-principals of the college graced the occasion.

## யாருக்கெல்லாம் மகளிர் உரிமைத்தொகை ரூ.1000 கிடைக்கும்?



மகளிர் உரிமைத்தொகை திட்டம் செப்டம்பர் 15-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. அதற்கான பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க அனைத்து ரேஷன் கடை அருகிலும் சிறப்பு முகாம் நடத்துவது உள்ளிட்டவை குறித்து இன்று நடந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்நிலையில், மகளிர் உரிமைத் தொகை பெற பயனாளிகளுக்கான தகுதிகளை தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5 ஏக்கர் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 இல்லை.

ஒரு குடும்ப அட்டைக்கு ஒருவருக்கு மட்டுமே மகளிர் உரிமைத்தொகை வழங்க முடிவு.

சொந்தமாக கார் வைத்திருப்போர், ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்திற்கும் மேல் உள்ளோருக்கு ரூ.1000 உரிமைத்தொகை கிடையாது.

பெண் எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், பெண் அரசு ஊழியர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படாது.

எந்த ரேஷன் கடையில் குடும்ப அட்டை உள்ளதோ, அந்தக் கடையில் உரிமைத்தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மகளிர் உரிமைத்தொகை பெற விரும்பும் பயனாளிக்கு 21 வயது நிரம்பியிருக்க வேண்டும். உச்சபட்ச வயது ஏதுமில்லை.

தகுதிவாய்ந்த பெண்களுக்கு உரிமைத்தொகை அவர்களுடைய வங்கிக்கணக்கில் செலுத்துவ-தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற ஜேஷ்டாபிஷேகம்...



நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் 1-7-2023ம் தேதி சனிக்கிழமை அன்று காலை 09.30 மணிக்கு ஜேஷ்டாபிஷேகம் 81கலச திருமஞ்சனம் நடைபெற்றது.

ஆனி மாத கேட்டை நட்சத்திரம் அற்புதமானது. அன்று ஜேஷ்டா அபிஷேகம் செய்து வழிபடுவார்கள். கேட்டை நட்சத்திரத்திற்கு ஜேஷ்டா நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்திற்கு உரிய தேவதை இந்திரன் என்கிறது வேத ஜோதிடம். ஆனி கேட்டையில் ஸ்ரீரங்கம் நம்பெருமாளுக்கு செய்யப்படும் அபிஷேகத்தை தரிசனம் செய்தால் இந்திரனைப் போல வாழ்வு அமையும் தலைமைப் பதவி தேடி வரும் என்பது நம்பிக்கை.

சூரியன் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலம் மிதுன மாதம். ஆனி மாதம் வடமொழியில் ஜேஷ்ட மாதம் என்று பெயர். ஜேஷ்டா என்றால் மூத்த அல்லது பெரிய என்று பொருள். ஆனி மாதத்தில் மிக நீண்ட பகல் பொழுது இருக்கும். இது பெரிய மாதமும் கூட. இந்த மாதத்தில்தான் ஆனி திருமஞ்சனம் உள்ளிட்ட பல முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன.



## ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற அன்னக் கூடை உற்சவம்...



நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் ஆனி மாதம் 17ம் தேதி ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு 02.07.2023ம் தேதி அன்று விழாவையொட்டி காலை சிறப்பு அலங்கார திருமஞ்சன அபிஷேகம் நடந்தது. காலை 11.30 மணிக்கு 81 படி ப்ரசாதம் அமுதுபடி அன்னக் கூடை உற்சவம் சிறப்பாக நடந்தது.





# CLASSIFIED

## VELACHERY
**Laxmipuram before Dandeeswaram Colony**

INDP HOUSE 3BHK, 1 Ground, 1600 Built, CCP, 3P Power, Metro, Bore Water, Safe Area during Flooding, Cyclone, EAST Facing, Rs.3.3Cr

**89399 43999**

---

**TMS YOGA AND ART'S CENTER**

SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE

Contact
9789098094
8012041624
9500090445

Velachery, Madippakkam, Keelkatalai.

---

## RESALE
**VELACHERY SRINIVASA NAGAR**
**Near ISHA Homes, 10mts to MRTS**

2BHK - 710 Sqft / UDS - 355 Sqft / GF / EAST Facing / Rs. 46Lacs

**90030 93204**

---

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

---

**Mother Land**

*Play School, Day Care & After School Care*

*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*

Contact
**72992 62185**
**90947 52300**

---

## WANTED
***Tele Callers***

CONTACT
**7305837388**

---

**Commercial Space for Rent**

600 Square feet for 15,000/-@ ground floor

*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*

3 month rent as advance

CONTACT
8015427018

---

## WANTED
Front Desk Executive
*(Male / Female)*

Ateliers Fitness Velachery, Behind A2b

Contact
**9841030772**

---

**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**

- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

---

CONSULTANT CATERING HOSPITALITY SERVICE

**NFC**
NIMS FOOD CONSULTANT

E. KAMESH KUMAR IHM-MBA

Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117

Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.

email:Nutritionnfc@gmc

Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

---

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்** Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | ₹ விலை 1 லிட்டர் |
| 102.63 | 94.24 |

---

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY

Online Class for Women and Kids

*FOR ALL AGE CATEGORIES*

CONTACT
**89391 53560**

---

## DESIGNING
Tamil & English DTP designing works
Rs. 500/- only

Contact
**7358182075**

---

## WANTED
**LADIES TAILOR**

**PRASUDRA Boutique**

No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY

CONTACT - PREMALATHA
**4435504719**
**8870393999**

---

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5457 | 1 கிராம் | 5919 |
| | 8 கிராம் | 43656 | 8 கிராம் | 47352 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 75.70 | | |
| | 1 கிலோ | 75700 | | |

Friday Price

---

**TUITION CENTRE @ Velachery**

**Baby Nagar**

*For Students Till 9th Grade of Any Syllabus*

Contact
**909 494 7285**

---

**Butter Flies**
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen

Ladies & Kids Only
Consultant: Beauty tip & women empowerment (adviser)

No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com

**80560 87391**
**81247 02731**

---

SHARAN TRAVELS

All kinds of Tourist vehicle available here
Drivers Available

Contact V. Marimuthu
**9840508030**

---

## RENTAL
LAND BUYING, SELLING

All Kind of Building Repair Works Undertaken

Contact B. Rajendran
**90809 94500**

---

## SERVICES
**Plumbing works**

Contact
Govindaswamy

87544 09752

ஆன்மீக தகவல்

# கண்டிப்பாக பின்பற்றவேண்டிய சில ஆன்மீக குறிப்புகள்...!!

1. வெற்றிலை நுனியில் லட்சுமியும், மத்தியில் சரவஸ்தியும், காம்பில் மூதேவியும் வாசம் செய்வதாக ஐதீகம். ஏனவே வெற்றிலைக் காம்பை கிள்ளி விட்டு வெற்றிலையைக் கழுவிய பின் பூஜைக்கு வைக்க வேண்டும்.

2. வெற்றிலையின் நுனிப்பாகம் சுவாமிக்கு இடது புறம் வருமாறு வைக்க வேண்டும். அப்போது வெற்றிலையின் காம்புப் பகுதி சாமிக்கு வலதுபுறம் இருக்கும்.

3. சாமிக்கு படைக்கும்போது வாழை இலை போட்டு படைக்கிறோம். அப்படி வாழை இலை போடும் போது வாழை மரத்திலிருந்து நறுக்கப்பட்ட பகுதி சுவாமி படத்திற்கு வலது பக்கம் வரவேண்டும்.

4. மாலையில் வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு முன் தான தருமம் செய்வதென்றால் செய்து விடுங்கள். விளக்கு ஏற்றிய பின் தான தருமம் செய்யாதீர்கள்.

5. குழந்தைகளுக்கு ஆன்மிக வழிகாட்டும் ஸ்லோகங்களும், நமது நீதி நூல்களில் உள்ள நல்ல பழக்க வழக்கங்களும் கற்றுத் தர வேண்டும்.

6. பெண்கள் தலைமுடியை வாரி முடிந்து முடிச்சு போட்டுக் கொள்ள வேண்டும். தலையை விரித்து போட்டு இருந்தால் லட்சுமி தேவி தங்க மாட்டாள்.

7. பூஜை செய்யும்போது கடவுள் உருவங்களின் பாதங்கள் மற்றும் முகத்தைப் பூக்களால் மறைத்து விடக்கூடாது. முகமும், பாதமும் திறந்து நிலையில் இருக்க வேண்டும்.

8. செல்வத்திற்குரிய தெய்வங்களான வெங்கடாஜலபதி, லட்சுமி, குபேரன் ஆகியோர் படங்களை வீட்டின் வெளிப்புறம் பார்த்து இருக்குமாறு மாட்டக்கூடாது.

9. பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர் தெற்குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம். தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங்களை வைக்கவும்.

10. பூஜை செய்பவர் தெற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய திசைகளைப் பார்த்து கொண்டு உட்கார்ந்து பூஜை செய்யக்கூடாது.

11. பூஜை அறையில் அதிக படங்களையும், தெய்வச் சிலைகளையும் வைக்கிறோம் என்பதற்காக அவற்றை நெருக்கமாக வைக்கக் கூடாது. ஒவ்வொரு தெய்வச் சிலைக்கும் இடையில் போதிய இடம் விட்டு வைக்க வேண்டும்.

12. நிவேதனம் செய்த தேங்காயை சமையலில் சேர்த்து அந்த உணவை மறுபடியும் சாமிக்கு நிவேதனம் செய்யக்கூடாது.

13. அன்னம் முதலியவற்றை எவர்சில்வர் பாத்திரங்களில் நேரடியாக வைத்து தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது. பாத்திரத்தில் இலை வைத்து அதில் உணவை வைத்து நிவேதனம் செய்யலாம்.

14. திங்கட்கிழமையன்று பஞ்சால் செய்யப்பட்ட விளக்கு திரியை கையால் தொடக்கூடாது.

15. தனது வீட்டில் கோலம் போடாமலும் விளக்கேற்றாமலும் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.

16. எரியும் விளக்கில் எண்ணெய் அல்லது நெய்யை கையால் தொடுவதும் அதன் பிறகு அதைத் தன் தலையில் தடவிக் கொள்வதும் கூடாது.

17. சாமி படங்களில் உலர்ந்த பூக்களை விட்டு வைக்கக் கூடாது.

18. விஷ்ணுவை வணங்கி வீடு திரும்புபோது லட்சுமி தேவியும் நம்முடன் நம் வீட்டுக்கு வருகிறாள் என்பது ஐதீகம். ஆகவே விஷ்ணு கோவிலிலிருந்து வீடு திரும்புமுன் அங்கே உட்காரக் கூடாது.

19. பூஜை செய்யும் நேரத்திலாவது பெண்கள் ஸ்டிக்கர் போட்டு அணியாது குங்குமம் இட்டுக் கொள்ள வேண்டும்.

20. வாசலுக்கு நேர் எதிரே வாசலைப் பார்த்து சிரிக்கும் புத்தரை வைப்பது வளமை, வெற்றி, தனலாபம் ஆகியவை அளிக்க வல்லது.

## BEAUTY TIPS

# HOW TO DO THE PERFECT PEDICURE

***Soaking and Scrubbing Your Feet***

1.Soak your feet in warm water and Epsom salt for at least 10 minutes. Fill a foot spa or basin with warm water and about 1 cup (236.6 g) of Epsom salt. Soaking your feet is an important part of a pedicure as the warm water can help soften your skin and get rid of dead skin cells. Try not to soak them for longer than 20 minutes (you don't want to be working with wrinkly feet).

Test the water's temperature by dipping a toe in before putting your entire foot in the bath.

Epsom salt is an excellent addition to your foot bath because it helps reduce inflammation and soothe aching muscles.

Try adding a few drops of essential oils to your bath for a spa-like touch. Peppermint, lemon, or tea tree oils are great choices.

If you don't have Epsom salt, no worries! A bubble bath or moisturizing soap can soften and clean your feet just as well.

Don't have a foot bath or large basin? Fill your bathtub with enough water to cover your feet.

2.Use a pumice stone to scrub your feet while they're wet. A pumice stone is a light, porous volcanic rock used to remove dead skin cells and calluses. Simply hold the stone up to your foot and quickly move it back and forth. Work in 1 in (2.5 cm) large areas at a time for the best results. Apply steady pressure, but don't push so hard that it hurts.

If you don't have a pumice stone, try using a foot file to get the same benefits.

Most foot files have 2 sides, coarse and fine. Use the coarse side to loosen dead skin, and then use the fine side to smooth over the filed area.

3.Apply a foot scrub to the top and bottom of your feet. Squeeze or scoop a quarter-size amount of foot scrub into your palm, press it between both hands, and then rub your hands over your feet. Use small, circular motions to exfoliate and remove any leftover dead skin cells.

Foot scrubs come in all types of fragrances, so pick one that helps you relax the most.

If you don't have a foot scrub, try making your own out of ingredients in your pantry.

4.Rinse and wipe the scrub off your feet, and then dry them. After you've massaged and scrubbed your feet, dunk them back into your basin. Use a washcloth to wipe off the scrub. When the scrub is completely gone, dry your feet with a towel and wash your hands with soap and water.

***Trimming and Filing Your Nails***

1.Cut and shape your toenails with nail clippers and a nail file. Snip your toenails straight across using the clippers and try not to cut them too short, as this helps prevents hangnails and ingrown toenails. Angle the nail file at the corners of your nail to round them, or file them straight across for a squarer look.

2.Apply a cuticle oil and push your cuticles back with a cuticle tool. Cuticle oil helps soften the skin around your nail, so it's easier to press back. Rub the oil around the base of your nail, and then press your cuticles back gently, following the angle of the tool.

Read the instructions on your cuticle oil to see how much product to use on each nail. Typically, it's about 1 drop.

If you don't have cuticle oil or balm, try using honey as an alternative.

3.Apply foot cream to soften and moisturize your feet. Squeeze a quarter-size amount of cream into your hands. Then, rub the lotion into each foot until it's gone. This will help nourish your feet, leaving them smooth and soft.

***Painting Your Nails***

1.Place your toes in toe separators so it's easier to paint them. Toe separators are pieces of plastic or foam that space out your toes. Wearing them isn't necessary, but it can help you get a clean and even coat of nail polish on each toe. It's also especially helpful if your toes naturally curl in.

2.Paint your nails with a clear base coat to protect your natural nail. A base coat can help your polish last longer and prevents your nail from staining. Apply a thin layer of polish to each nail. Start at the cuticle, and work your way up the nail with even, vertical brush strokes. Let dry for about 2 minutes.

3.Paint your nails with at least 2 coats of nail polish. Pick out your favorite color or something that matches what you're wearing. Paint your toes as you did with the base coat using thin layers, but wait at least 15 minutes for each coat to dry.

The more coats of nail polish you have, the more saturated the color will be.

If you don't let the polish dry between coats, your pedicure could become clumpy or streaky.

Try painting each nail a different bright color for a bold, playful look.

Consider only painting the tips of your toenails to do a classic French pedicure.

Opt for a natural shade of pink or brown if you don't want to draw attention to your feet.

4.Apply a top coat for a beautiful shine. Once your base color is completely dry (wait at least 30 minutes after the final coat), finish off your pedicure with a top coat. This final layer locks in your hard work and protects the polish from chipping. Use the same technique as before, and wait around 15 minutes for it to dry.

Fast drying top coats are great when you're in a pinch and don't have time to wait for your pedicure to dry.

Holographic top coats add a layer of sparkle to your polish and look best over solid colors.

Matte top coats cancel out a nail polish's shine for a more natural look.

5.Remove the toe separators and rock your awesome pedi! Check to make sure the polish is completely dry by tapping the edge of a nail with the tip of your finger. You're good to go if it feels firm, cool, and dry. Now, grab your sandals and show off your amazing work.

# அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் வரலாறு



அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் மூலவர்:
விஸ்வேஸ்வரர்
அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் தாயார்:
விசாலாட்சி
அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள ஊர்:
கோயம்புத்தூர்

அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் வரலாறு:

இத்தலம் சுமார் 1000 ஆண்டுகள் தொன்மைவாய்ந்தது. ஆதியில் கோவை நகரை மைசூர் மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். கோவையை ஒட்டி உள்ள பகுதியை மருதைய்ய யதார்த்தி, வீரப்ப யதார்த்தி என்ற இரு சகோதரர்கள் ஆண்டு வந்தனர். வண்டிப் பேட்டை பகுதியில் காசி நர்மதை நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட பாணத்தை ஆவுடையாருடன் இணைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் விஸ்வேஸ்வரர் எனும் திருநாமத்தில் விளங்குகின்றார். ஈசுன் சகோதரர்கள் கனவில் தோன்றி தனக்கு ஒரு சன்னதி அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அதே நேரம் சிவ பக்தரான "சிவதீர்த்தர்" என்பவர் மூலம் சுவாமியின் ஆற்றலையும் மகிமையினையும் கேட்டு அறிந்தார். யதார்த்தி சகோதரர்கள் இருவரும் இத்தலத்திற்கு வருகை புரிந்து ஈசனை தொழுதனர். ஈசன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க விஸ்வேஸ்வரருக்கும் அம்பாளுக்கும் கருங்கல் திருப்பணிக்கு ஏற்பாடு செய்து பெரிய திருக்கோயிலை நிறுவினர். மக்கள் பெரும் அளவில் வந்து வழிபட வழி வகுத்தனர்.

பல நூற்றாண்டுகளுக்கு பின் கோவை நகரை மாதைய்யன் என்பவர் ஆட்சி புரிந்தார். இவர் காலத்தில் கோவிலைச் சுற்றி வீதிகள் அமைக்கப்பட்டன. 17ம் நூற்றாண்டில் மைசூர் மன்னர் சிக்க தேவராயாவின் கோயம்புத்தூர் பிரதிநிதியாக மாதே ராஜா இருந்தார். கோவை நகரின் முக்கிய சாலையில் அவருடைய அரண்மனை அமைந்திருந்தது. எனவே அச்சாலை க்ஷமாதே ராஜ மஹால் தெரு என்ற பெயரைப்பெற்றது. காலப் போக்கில் க்ஷராஜவீதி என வழங்கப்பட்டு அப்பெயரே நிலைத்தும் விட்டது.

ராஜவீதியின் மிக அருகேதான் இக்கோயில் அமைந்துள்ளது. மாதே ராஜ ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து திருப்பணிகளை மேற்கொண்டதுடன் தவறாமல் வழிபாடும் செய்து வந்தார். இவ்வாறாக பல்வேறு நிலைகளில் கோவையை ஆட்சி செய்த மன்னர்கள் மூலம் கோயில் விரிவாக்கம் கண்டது. கோயில் நிர்மாணித்து நீண்ட வருடங்கள் ஆன நிலையில், கட்டிடங்கள் சிதைந்து பழுதடைந்து விட்டது. சுமார் 24 ஆண்டுகளுக்கு முன் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த திட்டமிட்டனர்.

முதலில் கோயில் கட்டிய போது அமைத்திருந்த மேல் தளம் "மெட்ராஸ் டெரஸ்" என்ற வகையாகும் அத்தளத்தைப் பிரித்து எடுத்து விட்டு சிமெண்ட் கான்கிரீட் கொண்டு தளம் அமைத்தனர். அத்திருப்பணி நடந்த போது ஓர் அதிசயம் நடந்தது. கீழ் தளம் அமைக்க தோண்டிய போது அங்கு தீர்த்த கிணறு இருப்பது தெரிந்தது. ஆக்கிணற்றில் நீர் அதிக அளவில் இருப்பது அனைவரையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தியது. சிதிலமடைந்திருந்த உப்புற சுவற்றைச் செப்பனிட்டு, பாதுகாப்புக்காக சிமெண்டால் ஆன முடியும் அமைத்தனர். இன்று வரை இத்தீர்த்தம் தான் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இக்கோயில் அமைந்துள்ள பகுதி ஆதியில் வண்டிப் பேட்டையாக இருந்தது. போக்குவரத்து வசதிகள் இல்லாத காலத்தில் சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து காய்கறிகள், தானியங்கள் போன்றவற்றை வண்டிகள் மூலம் கொண்டு வந்து இறக்கிவைத்த பின் மாட்டிற்கும் வண்டிக்கும் ஓய்வு கொடுப்பார்கள். இந்த இடம் தான் வண்டிப்பேட்டை என வழங்கி வந்தது. இப்பேட்டைக்கு அருகில் கோயில் அமைந்துள்ளதால் பேட்டை விஸ்வேஸ்வர சுவாமி கோயில் எனப் பெயர் பெற்றது. இக்கோயிலில் குடிகொண்டுள்ள "சித்தி விநாயகர்" கண்பார்வை போன அர்ச்சகருக்கு கண்பார்வையை திரும்பக் கிடைக்கச் செய்த ஆற்றல் மிகுந்தவர். பல வருடங்களுக்கு முன் அர்ச்சகர் ஒருவர் சித்தி விநாயகர் கோயிலில் பூஜை செய்து வந்தார். திடீரென ஒரு நாள் கண்பார்வை மங்கியது. ஒரு கால கட்டத்தில் கண்பார்வை முழுதும் போய் விட்டது. தன் வாழ்க்கை வாழ்வாதாரம் ஆகியவற்றை எண்ணி நிலை குலைந்து போனார். பிரபல கண் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற்றார். பலன் இல்லை. மருத்துவரோ "தங்களுக்கு கண்பார்வை திரும்ப பெற வாய்ப்பே இல்லை. இப்படியே வாழ கற்றுக் கொள்ளுங்கள்" என அறிவுறுத்தி விட்டார்.

அர்ச்சகர் மனம் தளராமல் தினமும் கோயிலுக்கு வந்து தான் பூஜை செய்து வந்த சித்தி விநாயகர் சன்னதி முன் அமர்ந்து வேண்டிக் கொண்டே இருந்தார். தினமும் கோயிலில் "கந்த புராணம்" சொற்பொழிவு நடைபெறும். அக்காலத்தில் ஓலைச் சுவடிதான் இருந்தது. கந்த புராணமும் ஓலைச் சுவடி வடிவில்தான் இருந்தது. தான் நினைத்த காரியம் கை கூடுமா? என ஏட்டில் நூல் போட்டு பார்ப்பார்கள். ஏட்டினை ஒருவர் கையில் பிடித்த நிலையில், காரியத்தை நினைத்தவர் நூலின் இருமுனைகளையும் பிடித்துக் கொண்டு ஏட்டின் பக்கவாட்டில் சொருகுவர். பின் அப்பக்கத்தை திறந்து படித்துப் பலன் சொல்வார்கள்.

அர்ச்சகர் அவ்வாறு நூல் போட்டு பார்த்ததில் "அனந்தனுக்கு சாபம் நீங்கு படலம்" வந்தது. திருமால் ஒரு சமயம் அம்மையின் சாபத்தால் பாம்பு வடிவம் பெற்றார். ஆலங்காட்டில் ஓர் ஆலமா பொந்தில் தவம் புரிந்து கொண்டிருந்தார்.

விநாயகப் பெருமான் திருசெங்கோட்டுக் கணபதீச்சுரத்தை விட்டு தேவர்களுடன் ஆலங்காட்டை அடைந்தார். விநாயகரைக் கண்டவுடன் பாம்பு வடிவில் இருந்த திருமால் வணங்கித் துதித்தார். விநாயகருடைய அருட்கருணையினால் பாம்பு வடிவம் நீங்கி தம் பழைய வடிவத்தைப் பெற்றார். மகிழ்ச்சியுடன் விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டார். அப்படி வழிபட்ட நாள் மார்கழி மாதம் சுக்ல பட்சத்து சஷ்டியாகும். அன்று விநாயகப் பெருமானை வழிபட்டோர் வாழ்வில் எல்லா நலன்களும் எய்துமாறு திருமால் விநாயகரிடம் வரம் பெற்றார்.

இதைப் படிக்க கேட்ட அர்ச்சகருக்கு ஓர் உத்வேகம் பிறந்தது. தானும் அவ்வாறே அந்த நாளில் விரதம் இருந்து தொழ முடிவெடுத்தார். மேலும் சித்தி விநாயகர் தனக்கு கண் பார்வை திரும்ப கிடைக்கச் செய்வார் என மன உறுதியுடன் இருந்தார். இரண்டு மார்கழியில் வணங்கியதன் பலனாக தான் இழந்த பார்வையைத் திரும்ப பெற்றார். சுமார் 90 வருடங்களாக இப்பூஜை நடந்து வருகிறது.

அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் சிறப்பு:

நர்மதை நதியிலிருந்து கொண்டு வந்த பாணலிங்கம் சுயம்புக்கு அடுத்த நிலை ஆற்றல் வாய்ந்தது.

அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் திருவிழாக்கள்:

இக்கோயிலில் சோமவாரம் பிரதோஷம், சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, சஷ்டி, கிருத்திகை, ராகு



கால துர்க்கை பூஜை, தேய்பிறை அஷ்டமி, அமாவாசை மற்றும் பவுர்ணமி தினங்களில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது வருட விழாக்களில் விநாயகர் சதுர்த்தி, மஹா சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், அன்னாபிஷேகம், நடராஜர் அபிஷேகம், ஆடிபூரம், நவராத்திரி, கந்தர்சஷ்டி தைப்பூசம் போன்ற விழாக்கள் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றன. சித்திரை மாதத்தில் 9 நாட்கள் கொண்டாடப்படும் "சித்திரை பெருந்திருவிழா" இத்தலத்தின் முக்கிய வருடத் திருவிழாவாகும். வாஸ்து சாந்தி பூஜையைத் தொடர்ந்து அடுத்தநாள் கொடியேற்றத்துடன் விழா துவங்கும். விழாக் காலங்களில் காலை சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். காலை 11.30 அளவிலும் மாலை 7.00 மணியளவிலும் சூரிய பிரபை, சந்திரபிரபை, கிளி, அன்னம், பூ பல்லக்கு மற்றும் குதிரை வாகனங்களில் தினமும் புறப்பாடு நடைபெறும். ஐந்தாம் நாளன்று இரவு ரிஷப வாகன பஞ்ச மூர்த்தி புறப்பாடு நடைபெறும். இதில் விநாயகப் பெருமான் மூஷிக வாகனத்திலும் முருகன் வள்ளி தெய்வானை மயில் வாகனத்திலும் அம்பாள் கிளி வாகனத்திலும் சண்டிகேஸ்வரர் ரிஷப வாகனத்திலும் விஸ்வேஸ்வரசுவாமி ரிஷப வாகனத்திலும் புறப்பாடு நடைபெறும். முடிவில் நால்வருக்கு காட்சியருளல் இடம் பெறும். 6 ம் நாள் மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாண வைபவமும் தொடர்ந்து யானை வாகனப் புறப்பாடும் உண்டு.

ஏழாம் நாள் பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் ராஜ வீதி, ஒப்பணக்கார வீதி, வைசியாள் வீதி, கருப்பகவுண்டர் வீதி, இடையர்வீதி உப்பார வீதி வழியே பயணித்து கோயிலை அடையும் நிகழ்வு கண்களை விட்டு அகலாத ஒன்றாகும். 8ம் நாள் பரிவேட்டையும் நிறைவு நாளான பவுர்ணமியன்று தீர்த்தவாரி, கொடியிறக்கம், 63 நாயன்மார்கள் கூட்டு வழிபாடு ஆகியவை இடம் பெறும். இரவு 7 மணியளவில் பைரவர் பூஜையைத் தொடர்ந்து சுவாமி புறப்பாட்டுடன் இப்பெருவிழா வைபவம் நிறைவுபெறும்.

திருவிழா நாட்களில் தினமும் பக்திச் சொற்பொழிவுகளும், தேவார திருமுறை பாராயணமும் நடைபெறும். மேலும் கோயில் வளாகத்தில் 60 ஆண்டுகளாகத் தொடர்ந்து தேவார பாடசாலை இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் பிரார்த்தனைகள்:

நல்ல ஆரோக்கியம் கிடைக்க, திருமணத்தடை நீங்க, எதிரிகள் பயம் நீங்க, புத்திர பாக்கியம் பெற, நாள்பட்ட வியாதிகள் குணமாக இங்கு பிரார்த்தனை செய்யப்படுகிறது.

அருள்மிகு விஸ்வேஸ்வரர் திருக்கோயில் நேர்த்திக்கடன்:

ருத்ர ஜபம், மிருத்ஞ்ஜய ஜபம் ஆயுள் ஹோமம் ஈசனுக்கு செய்து வழிபட நல்ல ஆரோக்கியம் கிடைக்கின்றதாம். திருமண தடை நீங்க அம்பாளுக்கு சுயம்வர பார்வதி ஜபம், எதிரிகள் தாக்கத்தை நீக்க சுப்பிரமணியருக்கு திரிசதி அர்ச்சனை, புத்திர பாக்கியம் பெற நகப்பழ இலையில் சுப்ரமணியருக்கு அர்ச்சனை என பூஜைகள் செய்து பலன்பெற்று வருகின்றனர். விஸ்வேஸ்வரர் நாள்பட்ட தீராத வியாதிகளை தீர்த்து வைப்பதில் சிறந்து விளங்குகின்றார். கருவறையில் தாரையின் நீர் பாணத்தின் மீது விழுந்து பரவி ஆவுடையார் வழியாக வழியும் தீர்த்தத்தை வியாதி உள்ளவர்கள் பிரசாதமாக எடுத்துக் கொள்ள, நோய் முற்றிலுமாக குணமாகின்றதாம்.

## BOOK REVIEW OF THE WEEK

Hey guys, today we're reviewing ***GERONIMO STILTON MOUSE HOUSE HUNTER***. So, the book starts off with Sally Ratmousen, editor in chief of the Daily Rat, the Rodent's Gazette competitor saying that the Gazette is bankrupt, and everyone believes her. With tears in his eyes, Geronimo goes to work that day. And finally he learns that he has to sell his house. Geronimo sells his house and becomes homeless. He then learns that all of this was a scheme by Sally Ratmousen to make the Gazette look bad. This book immediately gets into the story as Geronimo watches an interview with Sally. This is when he finds that his company is bankrupt. He goes to work and finds out he must sell his house. This when the tragedy slowly unfolds. With no money and no house, he is forced to wander the street. Now I will separately talk about the good and bad characters.

***Geronimo:***

This book really makes us feel sad for him. The first 50 pages are the saddest pages ever in a Geronimo Stilton book. He has no one to help him. He is very likable in this book. Though he does cry a little bit too much. When his house is sold, he wanders for hours and hours. He finally finds shelter in a little wooden house in Parmesan Park, where he used to play when he was little. He snuggles with his pet fish Hannibal and takes rest for a while. When he wakes up, for a moment, he feels like the happiest mouse in the world, but the crushing realization of homelessness comes crashing on him. So, when he heads to work that day, he is almost depressed as he loved his home. Geronimo literally says that when he sold his house, he left his heart in it. Whenever he has a bad day, he always looks forward to coming home. He loves it very much. Now he must buy a new house, with the low budget he has. After clicking on an ad on a house finding website, he is transferred to a call to someone called the Problem Solver, who turns out to be Trap, his cousin. After his encounter with Trap, he makes the little wooden house in the park, his temporary home. All of this leads to the shocking discovery that Sally had lied about it. Geronimo gets his house back and all his belongings and becomes happy again.

***Trap:***

Trap is not as likable as he was in something like Journey Through Time. He acts pretty mean to Geronimo in the book. You get the feeling that Trap is frustrated with Geronimo throughout the book. He acts like he is the best problem solver in the city but most of the things he does in the book are dim witted.

***Sally Ratmousen:***

As she is absent for most of the book, she doesn't get much development. She is present in the beginning and only comes back at the end of the story. But during the time that she is present, she is the most passive aggressive rat in the world. When Geronimo comes to her to get his house keys back, she assumes she that he hasn't done the thing she wanted him to do without even letting him speak. The task was to get an interview with Bounce Ballmouse, a basketball star.

***Bounce Ballmouse:***

Genuinely the worst character in the book. He only appears for like 10 pages. All that we know about him is that he's shy, loves his mom and is super rich. He gets the least amount of character development, and he got the silliest name in any book, like, that name makes me laugh every time I hear it. It also means that his mother can be called Mrs. Ballmouse, which is also very goofy.

***Side characters:***


The side characters in the book are fine, not too bad, and not excellent at the same time. Geronimo's grandpa is cheap, and he yells all the time. This is the first time that he has cried in the series. Benjamin, Thea, and Bugsy Wugsy only get like 5 pages to themselves, but all of them have been greatly developed by the author in past books.

***Overall Review:***

A weird and melodramatic book but I like it very much.



**Yeddanapudi Jeyan**
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.




[ 273 ] **திருக்குறள்**



வலியில் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று.
Vaunting sainthood while week within
Seems a grazer with tiger skin.

## ALTERNATIVES

***Very careless - reckless***
***Very crowded - packed***
***Very hungry - ravenous***
***Very important - significant***
***Very messy - Disorganized***



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,






# இந்த வார ராசிபலன்



### மேஷம்

இந்த வாரம் நீங்கள் வீட்டு வேலைகளில் பெண்களுக்கு உதவலாம் . இது குடும்பத்தில் உறுப்பினர்களுடனான உங்கள் உறவை வலுப்படுத்த உதவும்.



### ரிஷபம்

இந்த வாரம், உங்களில் ஆக்கப்பூர்வமான யோசனைகள் அதிகரிக்கும், நீங்கள் நிறைய பணம் சம்பாதிக்க புதிய வாய்ப்புகளைப் பெற முடியும்.



### மிதுனம்

இந்த வாரம் நிதி ரீதியாக, வேகத்தைத் தக்க வைத்துக் கொள்ள குறைந்த முயற்சி எடுத்தாலும் நல்ல லாபத்தைப் பெறுவீர்கள்.



### கடகம்

இந்த வாரம் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவீர்கள் உங்கள் நிலைமையை மேம்படுத்தி உங்கள் முயற்சிகளை சரியாக வைப்பதில் வெற்றி பெறுவீர்கள்.



### சிம்மம்

இந்த வாரம் உங்கள் உடன்பிறந்தவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள், அவர்களின் உதவியால் உங்கள் குடும்ப வாழ்க்கையை சீராக நடத்த முடியும்.



### கன்னி

இந்த வாரம் உங்கள் வருமானம் அதிகரிக்கும், இதன் காரணமாக எதிர்காலத்திற்காக உங்கள் பணத்தை சேமிக்கவும் திட்டமிடலாம்.



### துலாம்

இந்த வாரம் உங்கள் நிதிப் பக்கத்தைப் பலப்படுத்தும். நீங்கள் அனைத்து விதமான செலவுகளையும் கட்டுப்படுத்தி உங்கள் செல்வத்தை குவிக்க முடியும்.



### விருச்சிகம்

இந்த வாரம், குடும்பத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த உங்கள் மனைவி உங்களுக்கு உதவுவார், மேலும் அவர் உங்களுக்கு மிகவும் உதவியாக இருப்பார்.



### தனுசு

இந்த வாரம் பல சுப கிரகங்களின் செல்வாக்குடன் உங்கள் மன உறுதி பலமாக இருக்கும், உங்கள் தொழில் வாழ்க்கையில் புதிய சாதனைகளை அடைய முடியும்.



### மகரம்

இந்த வாரம், உங்களின் நல்ல குணத்தால் உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள எதிர் பாலினத்தை சேர்ந்தவர்களையும் நீங்கள் ஈர்க்க முடியும்.



### கும்பம்

இந்த வாரம் நீங்கள் குடும்பத்திற்காக ஒரு புதிய வீட்டை வாங்கலாம் அல்லது உங்கள் பழைய வீட்டை அழகாகவும் ஒழுங்கமைக்கவும் முடிவெடுக்கலாம்.



### மீனம்

இந்த வாரம், நீங்கள் சமூகத்தின் பல பெரிய நபர்களை சந்திக்க முடியும். அத்தகைய சூழ்நிலையில், இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

# YOGASANAM

## ஆஞ்சநேயாசனம்

***பலன்கள்:-***

முதுகுத்தண்டு மற்றும் முதுகுத் தசைகளை பலப்படுத்துகிறது.
தோள்களை விரிக்கிறது
நுரையீரலைப் பலப்படுத்துகிறது
வயிற்று உள் உறுப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
உடலின் ஆற்றலை வளர்க்கிறது
இடுப்புப் பகுதியின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
இடுப்புப் பகுதியில் உள்ள அதிக சதையைக் கரைக்க உதவுகிறது
சையாடிக் வலியைப் போக்க உதவுகிறது
உடலின் சமநிலையைப் பராமரிக்கிறது
மனதை அமைதிப்படுத்துகிறது



***செய்முறை:-***

விரிப்பில் நேராக நிற்கவும். இரண்டு கால்களுக்கு இடையில் சற்று இடைவெளி விட்டு நிற்கவும்.

வலது காலை பின்னால் நீட்டி முட்டியிலிருந்து பாதம் வரையில் தரையில் படுமாறு வைக்கவும்.

கைகளை மேல் நோக்கி உயர்த்தவும். இரண்டு உள்ளங்கைகளும் ஒன்றை ஒன்று பார்த்தவாறு இருக்க வேண்டும்.

நேராகப் பார்க்கவும்.

வயிற்றுப் பகுதியை முன்தள்ளி முதுகை வளைத்து தலையையும் கைகளையும் பின்னால் சாய்த்தவாறும் இவ்வாசனத்தைப் பழகலாம்.

20 வினாடிகள் இந்நிலையில் இருக்கவும். பின் ஆரம்ப நிலைக்கு இடது காலைப் பின்னால் வைத்துப் பயிலவும்.

***குறிப்பு:-***

தீவிர இடுப்புப் பிரச்சினை உள்ளவர்கள் மற்றும் தொடைப்பகுதியில் உள்ள தசையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இவ்வாசனத்தைத் தவிர்க்கவும். கால் முட்டியில் வலி ஏற்பட்டால் விரிப்பை மடித்து காலுக்கடியில் வைத்துப் பழகலாம்.

# GENERAL KNOWLEDGE QUESTIONS FOR KIDS

1. Who was the first law minister of independent India?

2. Who opened the first school for girls in India?

3. Who was the first Indian woman to become a pilot?

4. Who was the first Indian to become the president of the UN General Assembly?

5. Which language was thought to be spoken by Buddha?

6. Who is known as the missile woman of India?

7. In which century did the use of the Charkha (spinning wheel) become common in India?

8. Who was the first Indian woman to win the Ashoka Chakra?

9. In which year did the massacre of Jallianwala Bagh occur?

10. How many years did it take to build the Taj Mahal?

11. Who was the first Indian woman to win a medal at the Olympics?

12. Who is the first Indian to win a Nobel Prize?

13. What is the name of the oldest known civilization found in the Indian subcontinent?

14. Who is the first Indian woman to become a botanist? This person also made sugarcanes taste sweeter.

15. How many bones does a human adult have?

16. In which country is the Global Seed Vault located?

17. Apart from Homo Sapiens, which are the other two species under the genus 'Homo'?

18. Why does the Red Sea's water sometimes turn red?

19. Which are the easily available sources of Vitamin B12?

20. Which gases are responsible for global warming?

21. Who designed the periodic table?

22. What is used for artificially ripening fruit?

23. Which element is a diamond made of?

24. Which gas is also known as laughing gas?

25. What is the highest temperature that mercury thermometers can measure?

# *Entertainment Corner*

## ARUSUVAI SAMAYAL

## SEERAGA PUTTU

### INGREDIENTS

1 cup Parboiled rice (puzhungal arisi)
3 tablespoon toor dal
1 teaspoon cumin seeds
1 teaspoon black pepper
2 tablespoon coconut oil
1/4 teaspoon mustard seeds
1 teaspoon chana dal
2 sprigs curry leaves
2 green chillies
2 dry red chillies
1/2 cup chopped onions
1 teaspoon salt
½ cup fresh shredded coconut

### INSTRUCTIONS

Dry roast the rice, toor dal, cumin and black pepper on a pan until the ingredients are hot to touch. About a couple of minutes. Set aside.

Grind the dry roasted rice mixture in a mixie. Grind to a coarse powder.

Heat oil in a pan and add in the mustard seeds and chana dal. Add in the curry leaves, split green chillies and dried red chillies. Let the mustard seeds crackle.

Add in the chopped onions and salt and saute till the onions are soft.

Add in the fresh shredded coconut. Saute for a minute. Add in 2.5 cups of water. Let the water come to a boil.

Once the water is boiling, add in the ground rice and dal mixture.

Cook for 3-4 minutes till the mixture absorbs all the water and becomes thick. Remove from heat and set aside to cool.

Let the dough become warm. When the dough is still warm, dip your hands in cold water and take a small lemon size ball of dough. Press the dough a little to form oblong shaped dumplings. Set aside. (Remove the chillies while making the dumplings)

Place the dumplings on an idli plate or any flat plate and steam it for 15 minutes on a medium flame. Remove from heat.

Serve hot with coconut chutney, red chutney or kara chutney.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 3 | 5 | 1 | 7 | 9 | 2 | 8 |
| 8 | 1 | 5 | 3 | 2 | 9 | 7 | 4 | 6 |
| 2 | 9 | 7 | 8 | 6 | 4 | 3 | 1 | 5 |
| 9 | 2 | 8 | 1 | 7 | 5 | 6 | 3 | 4 |
| 4 | 7 | 1 | 6 | 3 | 2 | 5 | 8 | 9 |
| 5 | 3 | 6 | 9 | 4 | 8 | 1 | 7 | 2 |
| 7 | 5 | 9 | 4 | 8 | 3 | 2 | 6 | 1 |
| 3 | 6 | 4 | 2 | 5 | 1 | 8 | 9 | 7 |
| 1 | 8 | 2 | 7 | 9 | 6 | 4 | 5 | 3 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 4 | 5 | | 2 |
| | 5 | | | | 3 | | | |
| | | 8 | | | 5 | 3 | 6 | |
| | | | 2 | | | 7 | 4 | 3 |
| 2 | 7 | | 3 | | | | 8 | |
| 3 | 4 | | 7 | 5 | | | | |
| | | 5 | 4 | | | | | 6 |
| 9 | | 2 | | | | | 5 | |
| 4 | | | | | 2 | 9 | | |

## விடுகதை விளையாட்டு

1.பகலிலெ நீல நிற சாலை இரவிலே மஞ்சள் நிற சோலை -அது என்ன?

2.நடுங்க வைப்பான் அனைவரையும் அடங்கி போவான் அனலிடம் -அது என்ன?

3.சாப்பாடு போட்டால் வளரும் தண்ணீ கொடுத்தால் அழியும் -அது என்ன?

4.கோபம் வந்தால் வாய் பேசுவான் நன்றிக்கடனுக்கு வால் வீசுவான் -அவன் யார்?

5.உயரத்தில் பிறப்பான் தாகத்தை தீர்ப்பான் -அவன் யார்?

6.பிறப்பதும் தண்ணீரிலே இறப்பதும் தண்ணீரிலே -அவன் யார்?

7.லட்சம் பேர் கொண்ட படை திரண்டாலும் ஒரு தூசு, புழுதி கிளம்பாது -அவர்கள் யார்?

8.தாழ்ப்பாள் இல்லாமல் கதவு தானாக திறக்கும் மூடும் -அது என்ன?

*எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்..........*

1.ஆங்கில அகராதியில் உள்ள எந்த 5 எழுத்து வார்த்தைகளை அதன் 4 எழுத்துக்கள் நீக்கியிருந்தாலும் ஒரே மாதிரியாக உச்சரிக்க முடியும்? ***'Q'ueue***

## சொல் விளையாட்டு

**அல்லிவட்டம்**

__________ __________

__________ __________

__________

சொல்லுக்குள் சொல்
5 சொற்கள்
கண்டுபிடியுங்கள்.

## *சென்ற வார சொல் விளையாட்டு விடைகள்*

1.சந்தை 2.சதம் 3.சமம்

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1.தந்தி 2.கடிகாரம்
3.இசைத்தட்டு 4.இரயில்
5.நாற்காலி 6.விறகு
7.கிரைண்டர் 8.விமானம்


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : D. Deepa |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
*Weekly - News Paper*
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
**044-42077328 / 7305837388**
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**


Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

TNBIL04133 R.Dis.No.1845/2014


# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி





*Joshua Daniel*
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.

## MEHENDI



## PAPER CRAFT




## படத்தில் உள்ள 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...!









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH